14-02-2019 OS 221/2010 DW1 முருகேசன்
பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணைதொடர்ச்சி

நான் இவ்வழக்கில் 1 வது பிரதிவாதி. எனது முதல் விசாரணைக்காக ஏற்கனவே நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி நிரூபண வாக்குமூலத்தை எனது முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள நீதிமன்றத்தை வேண்டுகிறேன். நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். வாசாஆ 1 ல் கண்ட சொத்துக்கள் பாகப்பிரிவை ஆன பிறகு அது குறித்து எனது தந்தை வருமான வரி துறைக்கு தகவல் தெரிவித்த மனுவின்அலுவலகநகல் தாக்கல் செய்கிறேன். அது பிவாசாஆ 3. பிவாசாஆ 3 மனுவில் வரிமான வரி துறையினரால் 11-07-73 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவு தாக்கல் செய்கிறேன். அது பிவாசாஆ 4. 16-04-1983 அன்று 1 ம் வாதி மற்றும் எனது பெற்றோர் எங்களுக்கு எழுதி வைத்த உயிலின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது பிவாசாஆ 5. (அசல் உயில் ஆவணம் தாக்கல் செய்யப்படாததால் வாதி தரப்பில் மேற்படி உயில் குறியீடு செய்வதற்கு ஆட்சேபணை தெரிவிக்கப்படுகிறது, பிரதிவாதி தரப்பில் மேற்படி ஆவணம் ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது எனவே குறியீடு செய்யலாம் என்று பதில் உரைக்கப்பட்டது. மேற்படி ஆட்சேபணைக்கு உட்பட்டு மேற்படி ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆட்சேபணைக்கான தீர்வு இவ்வழக்கில் தீர்ப்பு பகரப்படும்போது பகரப்படும்.) தாவா 28 வது இலக்க சொத்திற்கு என் பெயரிலும் 1 வது வாதி பெயரிலும் ஏற்பட்ட கணினி பட்டா எண் 1060 தாக்கல் செய்கிறேன். அது பிவாசாஆ 6. பட்டா எண் 1018 க்கு நான் செலுத்திய கிஸ்து ரசீது தாக்கல் செய்கிறேன். அது பிவாசாஆ 7. 29-04-1973 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட பதிவு நகல் தாக்கல் செய்கிறேன். அது பிவாசாஆ 8.29-04-1973 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட பதிவு நகல் தாக்கல் செய்கிறேன். அது பிவாசாஆ 9. என் பெயரில் ஏற்பட்ட பட்டா பாஸ் புத்தகங்கள் தாக்கல் செய்கிறேன். அவை பிவாசாஆ 10 வரிசை. ( எண்கள் 2) . 20-03-2000 தேதியில் நான் 1 ம் வாதிக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தின் பதிஹ நகல் தாக்கல் செய்கிறேன். அது பிவாசாஆ 11. 09-01-2006 ல் 1 ம் வாதி பாலசுப்பிரமணியம் என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தின் பதிவு நகல் தாக்கல் செய்கிறேன். அது பிவாசாஆ 12. 26-06-2006 அன்று 1 ம் வாதி வீரப்பன் என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தின் பதிவு நகல்தாக்கல்செய்கிறேன். அது பிவாசாஆ 13. 12-12-2008 அன்று 1 ம் வாதி மலர் என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தின் பதிவு நகல் தாக்கல்செய்கிறேன். அது பிவாசாஆ 14. 26-12-2013 அன்று 1 ம் வாதி மருதுபாண்டியன் என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தின் பதிவு நகல்தாக்கல்செய்கிறேன். அது பிவாசாஆ 15. 30-10-2013 அன்று 2 ம் வாதி 6 ம் பிரதிவாதிக்கு என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தின் பதிவு நகல்தாக்கல்செய்கிறேன். அது பிவாசாஆ 16. 1414 பசலிக்கு நான் செலுததிய கிஸ்து ரசீது தாக்கல் செய்கிறேன். அது பிவாசாஆ 17. பட்டா எண் 167 க்கு கட்டுப்பட்ட சொத்திற்கு நான் செலுத்திய கிஸ்து ரசீது தாக்கல் செய்கிறேன். அது பிவாசாஆ 18. கீழமாத்தூர்கிராமம் புல எண் 48/2 க்கு என் பெயரில் தாக்கலாகி உள்ள பட்டா பாஸ் புத்தகம் தாக்கல் செய்கிறேன். அதுபிவாசாஆ 19. முள்ளிபள்ளம் கிராமத்தில் உள்ள சொத்துக்களுக்கு என் பெயரிலும 1 ம் வாதியின் பெயரிலும் ஏற்பட்ட பட்டா எண்

837 ன் கணினி பட்டா தாக்கல் செய்கிறேன். அதுபிவாசாஆ 20. கதவு எண் 14/54, மற்றும் 14/55 ல் கொண்ட கட்டிடத்தின் புகைப்படம் தாக்கல் செய்கிறேன். அது பிவாசாஆ 21. மேற்படி ஆவணம் மேற்படி புகைப்பட கலைஞரால் தான் குறியீடு செய்யப்படவேண்டும் என்றும் இந்த சாட்சியின் மூலம் குறியீடு செய்ய இயலாது என்றும், வாதி தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது, மேற்படி புகைப்படம் எடுக்கப்பட்டு வெகுநாட்கள் ஆகிவிட்டதால் அதன் நெகடிவ்வோ, எடுத்த நபரோ தெரியவில்லை என்றும் எனவே இந்த சாடசியின் மூலம் குறியீடுசெய்யலாம் என்றும் பதில் உரைக்கப்பட்டது. மேற்படி ஆட்சேபணைக்கு உட்பட்டு மேற்படி ஆவணம் குறியீடுசெய்யப்படுகிறது. மேற்படி ஆட்சேபணைக்காக தீர்பு இவ்வழக்கில் தீர்ப்பு பகரப்படும்போது பகரப்படும்) பழைய வீட்டை புதுப்பிக்கப்பட்டபிறகு எடுக்கப்பட்ட புகைப்படங்கள் தாக்கல் செய்கிறேன். அவை பிவாசாஆ 22 வரிசை (எண்கள் 3) மேற்படி ஆவணம் மேற்படி புகைப்பட கலைஞரால் தான் குறியீடு செய்யப்படவேண்டும் என்றும் இந்த சாட்சியின் மூலம் குறியீடு செய்ய இயலாது என்றும், வாதி தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது, மேற்படி புகைப்படம் எடுக்கப்பட்டு வெகுநாட்கள் ஆகிவிட்டதால் அதன் நெகடிவ்வோ, எடுத்த நபரோ தெரியவில்லை என்றும் எனவே இந்த சாடசியின் மூலம் குறியீடுசெய்யலாம் என்றும் பதில் உரைக்கப்பட்டது. மேற்படி ஆட்சேபணைக்கு உட்பட்டு மேற்படி ஆவணம் குறியீடுசெய்யப்படுகிறது. மேற்படி ஆட்சேபணைக்காக தீர்பு இவ்வழக்கில் தீர்ப்பு பகரப்படும்போது பகரப்படும்) பிவாசாஆ 22 வரிசை புகைப்படங்களுக்கான குறுந்தகடு தாக்கல் செய்கிறேன். அது பிவாசாஆ 23. பிவாசாஆ 22 வரிசை புகைப்படங்களுக்கான புகைப்பட கட்டணம் செலுத்தியதற்காக ரசீது தாக்கல் செய்கிறேன். அது பிவாசாஆ 24. முள்ளிபள்ளம கிராமம் புல எண் 37 உட்பிரிவுகள் 10 ஏ , 17, 9 சொத்துக்கு என் பெயரில் தாக்கல் ஆகி உள்ள கணினி பட்டா தாக்கல் செய்கிறேன் . அது பிவாசாஆ 25. சோலைக்குறிச்சி கிராமத்தில் உள்ள சொத்துகளுக்கு என் பெயரில் தாக்கல் ஆகி உள்ள பட்டா எண் 148 ன் கணினி பட்டா தாக்கல் செய்கிறேன். அது பிவாசாஆ 26. 10-02-2016 அன்று 1 ம் வாதி சரவணபிரசாத் என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தின் பதிவு நகல் தாக்கல் செய்கிறேன். அது பிவாசாஆ 27. தெத்தூர் கிராமத்தில் என் பெயருக்கு ஏற்பட்ட 14-06-1992 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் அசல் தாக்கல் செய்கிறேன். அது பிவாசாஆ 28. தெத்தூர் கிராமத்தில் என் பெயருக்கு ஏற்பட்ட 17-06-1992 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் அசல் தாக்கல் செய்கிறேன். அது பிவாசாஆ 29. தட்டான்குளம் கிராமத்தில் என் மனைவி பெயரில் ஏற்பட்ட 22-07-1991 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் அசல் தாக்கல் செய்கிறேன். அது பிவாசாஆ 30. தட்டான்குளம் கிராமத்தில் 2 ம் வாதி பெயரில் ஏற்பட்ட 22-07-1991 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் அசல் தாக்கல் செய்கிறேன். அது பிவாசாஆ 31. தட்டான்குளம் கிராமத்தில் 1 ம் வாதி பெயரில் ஏற்பட்ட 22-07-1991 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் அசல் தாக்கல் செய்கிறேன். அது பிவாசாஆ 32. மணலூர் கிராமத்தில் என் பெயரில் ஏற்பட்ட 15-07-1991 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் அசல் தாக்கல் செய்கிறேன். அது பிவாசாஆ 33. 2 ம் வாதி பெயரில் ஏற்பட்ட 28-08-1986 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் அசல் தாக்கல் செய்கிறேன். அது பிவாசாஆ 34. என் மனைவி பெயரில் ஏற்பட்ட 28-08-1986 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் அசல் தாக்கல் செய்கிறேன். அது பிவாசாஆ 35. 2 ம் வாதி பெயரில் ஏற்பட்ட 28-06-1996 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் அசல் தாக்கல் செய்கிறேன். அது

பிவாசாஆ 36.    45 மற்றும் 75 இலக்க சொத்துகளுக்கு என் பெயரில் ஏற்பட்ட கிஸ்து ரசீதுகள் தாக்கல் செய்கிறேன் . அவை பிவாசாஆ 37 வரிசை (எண்கள் 8). தாவா 80 இலக்க சொத்து குறித்து 2 ம்பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட பட்டா பாஸ் புக் தாக்கல் செய்கிறேன். அது பிவாசாஆ 38. 2 ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிஸ்து ரசீதுகள் தாக்கல் செய்கிறேன். அவை பிவாசாஆ 39 வரிசை (எண்கள் 2) . எனது பெயரில் ஏற்பட்ட பட்டா எண் 307 மற்றும் 1060 க்கான கிஸ்து ரசீது தாக்கல் செய்கிறேன். அது பிவாசாஆ 40.

**சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு,
அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து
பார்க்கப்பட்டு/சாட்சிக்கு வாசித்து காண்பித்து
அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்/கையொப்பமிட்டார்.**

**முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி
மதுரை**